Chief Ministers' deliberations on communal parties' activities

* 124 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state the details of the conclusions reached at the conference of the Chief Ministers of States held at New Delhi on 14th December 1964 to curb the activities of communal parties?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Government decline to answer the question in public interest.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, அந்த மகாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் இரகசியமாக இருக்கலாம். அந்த மகாநாட்டில் நடந்த விவாதத்தைப் பற்றியும் குறிப்பிடவில்லை. வகுப்புவாதம் பரப்பப்படுவதை தடுக்கவும், வகுப்பு ஒற்றுமையை ஏற்படுத்தவும் என்ன . என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பது பற்றித்தான் நான் கேட்டேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த மாதிரியான மகாநாடுகளின் மூலம் முடிவு ஏற்பட்டால் அதைத் தெரிவிக்கலாம். அதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் அங்கே என்ன பேசப்பட்டது, என்ன விவாதிக்கப்பட்டது என்றெல்லாம் சொல்வதற்கில்லை.

Cloth Control Scheme

* 125 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pelased to state :—

(*a*) the details of the cloth control scheme introduced recently in so far as it relates to this State ; and

(*b*) the steps taken to ensure adequate supply of controlled categories of cloth in the State?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) A statement (*a*) is placed on the table of the House.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த அறிக்கையின்படி நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு விற்கப்படுகிறதா என்பதைப் பரிசிலனை செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த மாதிரி புகார் வந்தால் அதை உடனே பரிசீலிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. விலைக் கட்டுப்பாட்டுக்கு அதிகமாக விற்காமல் இருப்பதற்கு அகில இந்தியக் கமிட்டி ஒன்று போட்டு இருக்கிறோம்.

Industrial Seminars

* 126 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the names of the districts where industrial seminars have been held and action taken on the resolution of those seminars?

(*a*) **Printed as Appendix on pages 218–220.**